**கருக்கம்**

நெடுஞ்சாலை –இரயில்வே பணித்திட்டம் 2011–12–இன் கீழ் இரயில்வே துறையால் ஒப்புதலளிக்கப்பட்ட 28 பணிகளில் 23 பணிகளுக்கு இரயில்வே துறையும் நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையும் 50:50 என்ற பணப்பகிர்வு அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறையின் திட்டங்கள் அலகால் மேற்கொள்ள ரூ.740.01 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.க்யூ.2) துறை

அரசாணை (டி) எண்.200 நாள் 7–12–2011

கார்த்திகை 21, திருவள்ளுவராண்டு 2042

படிக்கவும்:

1) பொதுப்பாலப் பொறியாளர், தென்னக இரயில்வே அவர்களின் கடித எண்.W/352/1/1 நாள் 10.03.2010 மற்றும் 12.04.2010.
2) தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) அவர்களின் கடித எண்.2939/W2/2010 நாள் 29.04.2010, 17.05.2010, 1.06.2010.
3) தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) அவர்களின் கடித எண்.7780/W2/2010 நாள் 18.05.2011.

---

**ஆணை:**

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள 13 இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் / சாலை கீழ்பாலங்கள் அமைக்கும் பணிகளை பணப்பகிர்வு 50:50 என்ற அடிப்படையில் இரயில்வே பணித்திட்டம் 2011–12–இன் கீழ் எடுத்து செயல்படுத்திட தென்னக இரயில்வே துறை மாநில அரசின் பரிந்துரையினை கோரியது. தென்னக இரயில்வே துறையால் பரிந்துரைக்கப்பட்ட 13 பணிகளில் இரண்டு பணிகள் ( LC.No.27, 4) நீக்கம் செய்யப்பட்டும், இரண்டு பணிகளை (LC No.126,127) ஒரு பொதுவான பாலப் பணியாக செயல்படுத்திடவும், தீர்மானிக்கப்பட்டு, 10 பணிகள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் தென்னக இரயில்வே துறையால் இரயில்வே பணித்திட்டம் 2010–11–இல் சேர்த்து செயல்படுத்திட பரிந்துரைக்கப்பட்ட பணிகளில் விடுபட்ட 6 பணிகளுடன் இரயில்வே வாகன அலகு (Train Vehicle Unit) ஒரு இலட்சத்திற்கும் மேல் உள்ள தகுதி வாய்ந்த, 18 இரயில்வே கடவுகளில், சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணிகளையும் சேர்த்து மொத்தம் 34 பணிகளை செயல்படுத்திட இரயில்வே துறைக்கு பரிந்துரை செய்யக் கோரி பார்வை 2–இல் படிக்கப்பட்ட கடிதங்களில் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) நெடுஞ்சாலை துறை அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு இரயில்வே துறைக்கு தமிழக அரசால் பரிந்துரை செய்யப்பட்டது.

2. அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட 34 பாலப்பணிகளில் 28 பாலப்பணிக்கு மட்டுமே இரயில்வே துறையால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன், தொடர்பாக, பார்வை 3–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) நெடுஞ்சாலைத் துறை இரயில்வே துறையால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 28 பாலப் பணிகளில் 4 பணிகளான கடவு எண்.468 மற்றும் கடவு எண்.441–இல் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிகள் தேசிய நெடுஞ்சாலையில் வருவதால், தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் இப்பணிகளை மேற்கொள்ளவும், மேலும், கடவு எண்.2A மற்றும் கடவு எண். 2B–இல் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிகள் சென்னை மாநகராட்சி சாலையில் வருவதால், சென்னை மாநகராட்சி மூலம் அப்பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலகுகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், நெடுஞ்சாலைத் துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ள மீதமுள்ள 24 பணிகளில், 1 பணியான கடவு எண்.32–இல் சாலை மேம்பாலம் அமைக்கும் பணியினை நெடுஞ்சாலைத்துறையின் மெட்ரோ அலகின் மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.230, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 1–12–2010–இல் ஏற்கனவே நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால், பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 23 பணிகள் மட்டுமே நெடுஞ்சாலைத் துறையின் திட்டங்கள் அலகின் மூலம் மேற்கொள்ளவும் அப்பணிகளுக்கான தோராய மதிப்பீடு பிரேரணை, ஆலோசகர் நியமனம், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் பிற துறையினரின் பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைத்தல் போன்ற இனங்களுக்கு நிர்வாக ஒப்புதல் தொகை ரூ.740.01 கோடி வழங்குமாறும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) நெடுஞ்சாலைத் துறை அரசை கோரினார்.

4. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத்துறை அவர்களின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத்துறை அவர்களின் செயற்குறிப்பினை ஏற்று, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரயில்வே பணித்திட்டம் 2011–12 கீழ் இரயில்வே துறையால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்ட 23 இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம்/ கீழ்பாலங்கள் அமைத்தல் பணிகளை இரயில்வே துறையுடன் 50:50 என்ற பணப்பகிர்வு அடிப்படையில் செயல்படுத்திடவும், தேவைப்படும் நேர்வுகளுக்கு ஆலோசகர் நியமனம், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் பிற துறையினரின் பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைத்தல் போன்ற இனங்களுக்கும் ரூ.740.01 கோடிக்கு (ரூபாய் எழுநூற்று நாற்பது கோடியே ஒரு இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

அ) பொதுப்பணித்துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி துவக்க விழாவிற்கான செலவினங்கள், புகைப்படம் எடுத்தலுக்கான செலவினங்கள், மழைநீர் சேகரிப்பு அமைத்தலுக்கான செலவினங்கள் மற்றும் எதிர்பாரா செலவினங்கள் (ம) சில்லறை செலவினங்களுக்கு ஒதுக்கப்படும் தொகைகள் 2.5 சதவீதத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

ஆ) வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகினால் பாலப்பணிகளுக்கு திட்ட அறிக்கைகள் மற்றும் சரிபார்த்தல் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படாமல், கலந்தாய்வாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நேர்வுகளில், ஒவ்வொரு பணிக்குரிய தோராய மதிப்பீட்டு தொகையில் 1 சதவீதத்திற்கு மிகாமல் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து (ம) சரிபார்த்தலை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்செலவு–80–பொது–800– ஏனைய செலவு–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத்திட்டம்–JJ தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்கும் பதிலாக மேம்பாலங்கள்/சுரங்கப்பாலங்களும் கட்டுதல்–16 பெரும்பணிகள் (த.தொ.கு.5054–80–800–JJ–1604)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப் பணிகள் (New Service)" குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு –செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (பொதுப்பணி–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.62118/PW-I/2011, நாள் 7.12.2011–ல் பெற்ற இசைவுடனும், கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1057 (ஆயிரத்து ஐம்பத்தேழு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கிராமசந்திரன்,
அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–15
தலைமைப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், சென்னை–32.
பொது மேலாளர், தென்னக இரயில்வே, சென்னை–3.
தலைமைப் பொறியாளர், திட்ட மேலாளர் (இருப்புப்பாதை மாற்றம்), தென்னக இரயில்வே, சென்னை–8.
மாநில தலைமைக் கணக்காயம், சென்னை–18/35.
கருவூல அலுவலர், சென்னை–15.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் அமைச்சர் அலுவலகம், சென்னை–9
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
தேசிய தகவல் மையம் (NIC), சென்னை–9
செயலரின் தனிச்செயலர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
நிதி (பொ.ப–1/வ.செ.பொ–1/வ.செ.பொ.2) துறை, சென்னை–9.
இ.கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

<u>பிற்சேர்க்கை</u>

**இரயில்வே பணித்திட்டம் 2011–12– இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம்/ சாலை கீழ்பாலம் கட்டுதல். தோராய மதிப்பீடுகள்.**

| வ.எண். | கடவு எண். | அமைவிடம்/ சாலையின் பெயர் | நிலஎடுப்பு தொகை (கோடியில்) | மாநில அரசால் ஏற்கப்படும் தொகை (நிலஎடுப்பு தொகை உட்பட) (கோடியில்) | இரயில்வே துறையால் ஏற்கப்படும் தொகை (கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 59 | பழைய GST சாலை திருக்களிவாக்கம் சாலையில் பொன்விலன்தக்களத்தூர் வழியாக இரயில்வே கி.மீ.68/16–18–ல் உள்ள கடவு எண்.59–க்கு மாற்றாக செங்கல்பட்டு மற்றும் ஒட்டிவாக்கம் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் | 4.50 | 30.40 | 18.32 |
| 2 | 64 | படாளம் – கருங்குழி இரயில்வே நிலையங்களுக்கு இடையே கினார்– கீவலடத சாலையில் இரயில்வே கி.மீ.81/2–4–ல் உள்ள கடவு எண்.64–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 4.50 | 29.50 | 17.72 |
| 3 | 75 | பாக்கம்– அச்சரப்பாக்கம் இரயில்வே நிலையங்களுக்கு இடையே அச்சரப்பாக்கம்– பெதியகளக்காடி சாலையில் இரயில்வே கி.மீ.97/15–16–ல் உள்ள கடவு எண்.75–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 2.76 | 32.30 | 17.72 |
| 4 | 29 | சென்னை – பென்னேரிகரை– காஞ்சிபுரம் அருகில் உள்ள இரயில்வே கி.மீ.2/10–ல் உள்ள கடவு எண்.29க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் அமைத்தல் (நிலஎடுப்பு உட்பட) | 7.20 | 49.42 | 17.72 |
| 5 | 13 | திருநின்றவூர்– வேப்பம்பட்டு சாலையில் இரயில்வே கி.மீ.31/12–14–ல் உள்ள கடவு எண்.13–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நிலஎடுப்பு உட்பட) | 5.00 | 28.72 | 18.02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 16 | மீஞ்சூர்– காட்டூர்– திருவாளைவனம் சாலையில் இரயில்வே கி.மீ.24/16–18–ல் உள்ள கடவு எண்.16க்கு மாற்றாக நன்டியம்பாக்கம் மற்றும் மீஞ்சூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் கட்டுதல் (நிலஎடுப்பு உட்பட) | 4.50 | 28.32 | 18.02 |
| 7 | 88 | ஒலக்கூர்– பீபர் சாலையில் கி.மீ.1/6–ல் இரயில்வே கி.மீ.114–4–6–ல் உள்ள கடவு எண்.88–க்கு மாற்றாக ஒலக்கூர்– திண்டிவனம் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நிலஎடுப்பு உட்பட) | 0.70 | 20.96 | 18.02 |
| 8 | 102 | வெள்ளிமேடுபேட்டை– மயிலம் சாலையில் கி.மீ.21/0 இரயில்வே கி.மீ.134/28–30–ல் உள்ள கடவு எண்.102–க்கு மாற்றாக மயிலம்– பேரணி இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 0.865 | 22.43 | 17.72 |
| 9 | 111 | விக்கிரவாண்டி– நேமூர் சாலையில் கி.மீ.0/4 இரயில்வே கி.மீ.150/12–14–ல் உள்ள கடவு எண்.111–க்கு மாற்றாக முடியம்பாக்கம்– விக்கிரவாண்டி இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 1.20 | 20.20 | 17.72 |
| 10 | 126 மற்றும் 127 | இரயில்வே கி.மீ.149/9–10–ல் உள்ள கடவு எண்.126 மற்றும் இரயில்வே கி.மீ.150/9–10–ல் உள்ள கடவு எண்.127க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டுதல் (நில எடுப்பு உட்பட) | 3.00 | 36.38 | 21.70 |
| 11 | 70 | உளி– வல்லத்துார் சாலையில் இரயில்வே கி.மீ.4/8–ல் உள்ள கடவு எண்.70க்கு மாற்றாக சாலை கீழ்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 0.50 | 14.10 | 17.72 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 78 | கண்ணாடிகுப்பம்–அய்யனார் சாலையில் இரயில்வே கி.மீ.186/12–14–ல் உள்ள கடவு எண்.78–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 2.40 | 25.30 | 17.42 |
| 13 | 80 | வாளையம்பேட்டை–வாணியம்பாடி சாலையில் இரயில்வே கி.மீ.195/28–30–ல் உள்ள கடவு எண்.80–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 1.00 | 25.55 | 17.72 |
| 14 | 3 | இராமசந்திர நாயுடு தெருவில் (மாநகராட்சி சாலை) கி.மீ.0/4–ல் உள்ள இரயில்வே கி.மீ.2/9–11–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக கோயம்புத்தூர் மற்றும் இருகூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் கட்டுதல் (நிலஎடுப்பு உட்பட) | 4.25 | 26.70 | 17.12 |
| 15 | 10 | நாகப்பட்டினம்– கூடலூர்–மைசூர் கி.மீ.373/6–ல் உள்ள இரயில்வே கி.மீ.25/6–7–ல் உள்ள கடவு எண்.10க்கு மாற்றாக பெரிய நாயக்கன்பாளையம் மற்றும் காரமடை இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 3.00 | 30.70 | 17.72 |
| 16 | 3 | அவினாசி– திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ.81/4–ல் உள்ள இரயில்வே கி.மீ.2/1–2–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக பொள்ளாச்சி ஆனைமலை இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 1.00 | 20.42 | 17.72 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 162 | வடக்கு கோயம்புத்தூர்–இராமநாதபுரம்–போதனூர்–செட்டிபாளையம் சாலை கி.மீ.1008–ல் இரயில்வே கி.மீ.160/3–ல் உள்ள கடவு எண்.162க்கு மாற்றாக போதனூர்–செட்டிபாளையம் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 4.00 | 22.60 | 17.72 |
| 18 | 183 | சேலம் புறவழி சாலையில் உள்ள கி.மீ.2/2 சேலம் நகரம் மற்றும் சேலம் கிழக்கு இரயில்வே நிலையம் இடையில் கி.மீ.189/400–500–ல் உள்ள கடவு எண்.183க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 15.00 | 45.63 | 17.72 |
| 19 | 184 மற்றும் 185 | ஹஸ்த்தம்பட்டி சேரி சாலையில் கி.மீ.1/8–ல் உள்ள சேலம் சந்தை மற்றும் சேலம் நகரம் இரயில்வே கி.மீ.190/300–400 உள்ள இரயில்வே கடவு எண்.184 மற்றும் இரயில்வே கி.மீ.190/400–500 உள்ள இரயில்வே கடவு எண்.185க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டுதல் (நில எடுப்பு உட்பட) | 30.00 | 58.59 | 21.70 |
| 20 | 187 | வி.சி.சிசாலை கி.மீ.203/2–ல் உள்ள சேலம் சந்திப்பு மற்றும் சேலம் சந்தை இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கி.மீ.192/300–400–ல் உள்ள இரயில்வே கடவு எண்.187க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 18.00 | 42.14 | 17.42 |
| 21 | 473 | தஞ்சாவூர் – பட்டுகோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கலால்–காளையார் கோவில்–மறவமங்கலம்–இளையாங்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை (மா.நெ.29) கி.மீ.203/2–ல் மானாமதுரை மற்றும் பரமக்குடி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கி.மீ.578/600–700–ல் உள்ள கடவு எண்.473க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 50.00 | 37.15 | 17.42 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | 118A | திருச்செந்தூர் – பாளையங்கோட்டை–அம்பாசமுத்திரம்–தென்காசி–குற்றாலம்–செங்கோட்டை சாலை (மா.நெ.40) கி.மீ.60/2 இரயில்வே கி.மீ.357/500–600–ல் உள்ள இரயில்வே கடவு எண்.118Aக்கு மாற்றாக மேலப்பாளையம் மற்றும் செங்குலம் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 5.00 | 32.70 | 17.72 |
| 23 | 308, 27 மற்றும் 2 | திண்டுக்கல்–மனக்காட்டூர் சாலை கி.மீ.1/8–2/4–ல் உள்ள திண்டுக்கல்–அக்கரைப்பட்டி இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே கி.மீ.1/10–11 உள்ள கடவு எண்.2 மற்றும் திண்டுக்கல்–ஈரோடு இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே கி.மீ.70/200–300–ல் உள்ள கடவு எண்.27 மற்றும் தாமரைபாடி–திண்டுக்கல் இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே கி.மீ.431/0–100–ல் உள்ள கடவு எண். 3008க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) | 14.45 | 59.80 | 33.08 |
| | | மொத்தம் | | 740.01 | |

தா.கி.ராமசந்திரன்,
அரசு செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.